அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 6 (1) விதியின்படி கீழ்க் கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. மா. வே. நாராயணசாமி.
2. திரு. ஏ. ஆர். சுப்பையா.
3. திரு. முனு ஆதி.
4. திரு. ஜே. ஜேம்ஸ்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.

(முற்பகல் 10-00)

3. நடைமுறைக் கேள்விகள்.

(அ) குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை உறுதிப்படுத்த தீர்மானம் கொண்டுவரப்படுமா என்பது குறித்து.

திரு. க. உரா. எட்மண்ட் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்தியப் பேரரசி னுடைய குடியரசுத் தலைவரால் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டு, அவசரகால நிலைமை இன்றையதினம் அமலில் இருந்து வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சட்டமன்றங்கள், சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைகளின்போது குடியரசுத் தலைவரால் பிரகடனப் படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை 'ரேட்டிஃபை' செய்து இன்றையதினம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவசர காலகட்டத்தில் இப்பொழுது நாம் கூடியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வரும்? பாயிண்ட் ஆஃ் ஆர்டர் என்றால், நம்முடைய சட்டமன்றம் நடைபெறுவதற்குரிய விதிமுறைகளில் மாறுபட்டிருந்தால், நம்மால் மேற்கொள்ளப்பட்ட மரபுகளி லிருந்து மாறுபட்டிருந்தால் அதுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர். இது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வரும்? 'ரேட்டிஃபை' பண்ணவில்லை என்பது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

THIRU G. R. EDMUND: Please listen to me completely and then come to a conclusion. How can you decide whether it is a point of order or not unless you patiently listen to the whole statement that I am going to make on the floor of the House. Then I have no objection if you say straightaway that it is not a point of order. I concede it . . . .

இன்றைக்கு நாட்டுமக்களுக்கு இருக்கின்ற சந்தேகமெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஆட்சியிலே இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய கட்சி செயற்குழுக் கூட்டத்தில் இந்த அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால் பொதுமேடைகளில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்களானாலும் சரி, நம்முடைய அரசாங்கத்தி னுடைய மாண்புமிகு அமைச்சர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுக்கும்பொழுதும் சரி அவசரகாலச் சட்டத்தை ஆதரிப்பதாக அவர்கள் மறைமுகமாக கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சட்டமன்றங்கள் குடியரசுத் தலைவரால் பிரகடனம் செய்யப்படும் அவசர காலச் சட்டத்தை ரேட்டிஃபை செய்ய வேண்டுமென்று 'மேன்டேட்டரி புரோவிஷன்'-ல் இருக்கிறது. ஆனால் பல்வேறு மாநிலங்களிலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கும் பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சனையில் இரட்டை வேடம் போடுவதாக மத்திய அரசாங்கத்திற்கு ஒருவேளை சந்தேகம் ஏற்படலாம். ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் . . . .

1975 அக்டோபர் 24]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இவர் மத்திய அரசாங்கத்திற்காகப் பேசுகிறாரா? பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி விட்டு எதை வேண்டுமானாலும் பேசலாமா?

THIRU G. R. EDMUND: Not necessarily I should be the spokesman for the Centre. I am sorry. I have to remind the hon. Member, Thiru Krishnamoorthy, that he is not the Speaker.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam): I have also to remind the hon. Member that he was once the Deputy Speaker . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் அரசியல் கட்சி, அரசியலின் போக்கு, இவையெல்லாம் இந்த மன்றத்திற்கு வர வேண்டியதில்லை. பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று வரும் பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் நம்முடைய அவை நடைபெற நாமே வகுத்துக்கொண்டிருக்கும் விதிமுறைகள் இருக்கின்றனவே, அந்த விதிமுறைகளுக்கு மாறுபட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும், மரபு மாறுபட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதை விட்டு விட்டு கட்சிக்கு ஒரு வேஷம், இங்கே ஒரு வேஷம் போடுவது என்றெல்லாம் சொல்வது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

திரு. க. உரா. எட்மண்ட்: நான் கேட்க விரும்புவதெல்லாம், இப்படியொரு நிலைமை நாட்டிலேயிருக்கும்பொழுது நம்முடைய சட்டமன்றம் கூடியிருக்கிறது. இந்தக் கூட்டத்தில், அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப் பட்டதை தமிழ்நாடு சட்டமன்றம் அங்கீகரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பதை இந்தச் சட்டமன்றத்தில் நம்முடைய அரசு விளக்கும் வகையில் அதற்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவார்களா, மாட்டார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எத்தனை சட்டமன்றங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமோ அத்தனை சட்டமன்றங்க ளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜனாதிபதியால் அங்கீகாரமும் கொடுக்கப்பட்டு விட்டது. இதை இங்கே ரேட்டிஃபை செய்ய வில்லை என்றால் அது வேறு விவகாரம். அது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வரும்?

திரு. க. உரா. எட்மண்ட் : பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் என்ற முறையில் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் என்பது இந்த நேரத்தில் பயன்படுத்தக் கூடியது அல்ல. பிறகு பேசும் நேரத்தில் பேசிக் கொள்ளலாம.

அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவுகள் . . . .

திரு. ஏ. சுப்பிரமணியம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முடியட்டும். மசோதாவின் கீழே பாயிண்ட் ஆஃப் ஆர்டரா?

(ஆ) சட்ட முன்வடிகள் உறுப்பினர்களுக்கு முன்னதாக வழங்கப்படாமை குறித்து.

* **திரு. ஏ. சுப்பிரமணியம் :** இதன் கீழேயேதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர். இன்றைக்கு இரண்டு மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட இருக்கின்றன, 6 மசோதாக்கள் விவாதிக்கப்பட இருக்கின்றன. ஏற்கனவே இந்த மன்றத்தில் பலமுறை சொல்லப் பட்டு, சென்ற முறையும் பேசி, பட்ஜெட் கூட்டத்தில் சொல்லப் பட்டு, இந்த மசோதாக்கள் உறுப்பினர்களுக்கு வரும்பொழுது மிகவும் காலம் கழிந்து வருகின்றன, ஆதலால் நாங்கள் சரிவரப் பங்கெடுக்க முடியாமல் இருக்கிறது என்று தங்களிடத்தில் சொல்லி, அம்மாதிரி நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று சொன்னீர்கள். நேற்றையதினம் இரவு 10.30 மணிக்குமேல் எனக்குக் கிடைக்கிறது. அப்பொழுதுதான் விநியோகம் செய் திருக்கிறார்கள் விடுதியிலே. உறுப்பினர்கள் தூங்கப் போன பிறகு மசோதாக்களும், அஜெண்டாக்களும் கொடுக்கப்பட்டால் அதை நாங்கள் எப்பொழுது படிப்பது, எப்பொழுது திருத்தங்கள் கொடுப்பது என்று புரியவில்லை. ஆகவே, அரசு இந்த மசோதாக்களை அங்கத்தினர்கள் விவாதிக்காமலேயே அல்லது திருத்தங்கள் தராமலேயே நிறைவேற்றிவிட வேண்டுமென்று நினைக்கிறார்களா? அல்லது அங்கத்தினர்களுக்கு இந்த மசோதாக்கள் உரிய நேரத்தில் கிடைத்து, உறுப்பினர்களுக்கு